செ.வெ.எண்:51/ஜூன் நாள்: 20.06.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## முன்னாள் படைவீரர்கள் /விதவையர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை

## மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர். திரு.ச.நடராஜன், இ.ஆ.ப.அவர்கள் தகவல்

முன்னாள் படைவீரர்கள் / விதவையர்களின் குழந்தைகளுக்கு ஒன்றாம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை மற்றும் கல்லூரி படிப்புகளுக்கு ரக்ஷா மந்திரி விருப்புரிமை நிதியுதவி வாயிலாகவும் (RMDF) தொழிற்கல்வி சார்ந்த பட்டப் படிப்புகளுக்கு பாரதப் பிரதமர் கல்வி உதவித்தொகை வாயிலாகவும் (PMSS) கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. 01.06.2016 முதல் தங்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை பெற விரும்பும் முன்னாள் படைவீரர்கள் / விதவையர்கள் www.ksb.gov.in இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும். இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கும் போது உரிய ஆவணங்களை jpeg/jpg/gif/png வடிவில் மட்டுமே ஸ்கேன் செய்து அதன் அளவு 1 MB-க்கு மிகாமல் இருக்குமாறு பதிவேற்றம் செய்ய வேண்டும். மேலும் இணையதளம் வாயிலாக விண்ணப்பித்தவுடன் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து உரிய ஆவணங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திலுள்ள முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பித்து கல்வி உதவித்தொகை பெற்று பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**